பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 27 | வெள்ளிக்கிழமை | 12.12.2025 | அதிர்வு 134

### பூம் ட்ரக் சரிந்து கவிழ்ந்த

## விபத்தில் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

(க.மகாதேவன்)



மரக்கட்டைகள் ஏற்றிக் கொண்டிருந்த பூம் ட்ரக் ஒன்று திடீரென 06



# அநுர தலைமையில் இலங்கை மீண்டெழும்

## அமெரிக்கா முழு நம்பிக்கை

### எந்த உதவியையும் வழங்கத் தயார் என்றும் அலிசன் ஹூக்கர் தெரிவிப்பு



**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இலங்கை மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும், அதற் குத் தேவையான எந்த உதவியையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் அலிசன் ஹூக்கர் தெரிவித்தார்.** 06






நாடு முழுவதிலும் அனர்த்த நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் பணி மும்மரமாக இடம்பெறுகின்றது என்றால் யாழ்ப்பாணத்தில் மட்டும் அது யாருக்கு வழங்கப்படுகின்றது என்பதை மறைக்கும் பணிதான் மிக மும்மரமாக இடம்பெறுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

மாவட்டத்தில் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோர் குடும்ப எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்ற சர்ச்சை நாடளாவிய ரீதியில் மட்டுமன்றி நாடாளுமன்றம் வரையில் ஒலித்துவிட்ட பின்பும் அதன் உண்மையை வெளிப்படுத்த மாவட்ட நிர்வாக அதிகாரிகள் விரும்பவில்லை என்பது மட்டும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

நிவாரணப் பட்டியல் மற்றும் பணக் கொடுப்பனவுப் பட்டியல்கள் பகிரங்கமாக காட்சிப்படுத்தப்படும் என மாவட்ட அரச அதிபர் திரும்பத் திரும்ப கூறுகின்றார். இதில் 25 ஆயிரம் ரூபா பெறுவோர் பட்டியல் இன்னமும் வெளிவரவே இல்லை. அது 'வரும்... ஆனா வராது' என்ற 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தற்போது பொழிகின்ற மழை நாளை வரை நீடிக்க வாய்ப்பு

## டிசம்பர் 17 இல் புதிய காற்றுச் சுழற்சி?

"இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் நிலவிய காற்றுச் சுழற்சி வலுவிழுந்தது. ஆனால், இலங்கையின் தென்மேற்கு பகுதியைக் கொண்டு நிலவிய வளிமண்டல தளம்பல் நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கிடைத்து வரும் மழை நாளை வரை நீடிக்கும் வாய்ப்புள்ளது."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவரும் காலநிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளார்.

"இதனால் நாளை வரை கண்டி, நுவரெலியா, மாத்தளை, கேகாலை மற்றும் பதுளை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு நிலச்சரிவு அனர்த்தம் நிகழ்வதற்கும் வாய்ப்புள்ளது. ஆகவே, இந்த நிலச்சரிவு நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம்." – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளினதும் வளிமண்டலத்தில் ஈரப்பதன் அளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல இடங்களிலும் குளிரான காலநிலை நிலவுகிறது. உணரக்கூடிய வெப்பநிலையும் குறைவாகவே உள்ளது. இது மேலும் சில நாட்களுக்குத் தொடரும் வாய்ப்புள்ளது. எனவே, குளிரான கால நிலை தொடர்பான உணர்திறன் அதிகமுள்ளவர்கள் குறிப்பாக, வயதானவர்கள், நோயாளிகள் குழந்தைகள் அவதானமாக இருப்பது சிறந்தது.

வெப்பநிலை அளவுகளில் நிலவும் சுவாரசியமான நிலைமை காணப்படுகின்றது. கடந்த சில நாட்களாக இரத்தினபுரி மாவட்டம் அதிகூடிய வெப்பநிலையை (சராசரியாக 31.5 பாகை செல்சியஸ்) பெறும் அதேவேளை நுவரெலியா அதிகுறைந்த வெப்பநிலையைப் (சராசரியாக 16 பாகை செல்சியஸ்) பெறுகின்றது. இரண்டு பிரதேசமும் மிகப்பெரிய அளவு தூர இடைவெளியில் இல்லை. ஆனால் உயர வேறுபாடே மிகப்பெரிய வெப்பநிலை வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

அரபிக் கடலிலும் வங்காள விரிகுடாவில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வாகவே காணப்படுகின்றது. இது சராசரியாக 28 பாகை செல்சியஸ் என்ற அளவில் காணப்படுகின்றது. பொதுவாக



கடல் மேற்பரப்பு வெப்பநிலை 27 பாகை செல்சியஸை விட உயர்வாக இருந்தாலே கடலில் காற்றுச் சுழற்சிகள் உருவாகும் வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய ஒரு காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும் இதனை அடுத்த சில நாட்களுக்கு பின்பே உறுதிப்படுத்த முடியும்.

எவ்வாறாயினும் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது." – என்றும் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மீன்பிடிக்கு எதிரான போராட்டத்திற்கும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் ஆதரவு




மீனவர்களின்போராட்டத்திற்கும்ஆதரவாக கடற்றொழிலாளர்கள் அனைவரையும் பங்கேற்குமாறும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வலியுறுத்தியுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தம்பிராசா சந்திரதாஸ் இதனை தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய மீனவர்களின் எல்லை தாண்டி வடக்கு கடற்பரப்பில் மேற்கொள்ளும் மீன்பிடி மற்றும் உள்ளூரில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளையும் தடுத்து நிறுத்த நீரியல்வளத் திணைக்களம், மீன்பிடி அமைச்சர் , ஜனாதிபதி ஆகியோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாளை இடம்பெறவுள்ள மீனவர்களின் போராட்டத்திற்கும் ஆதரவாக கடற்றொழிலாளர்கள் அனைவரையும் பங்கேற்க வேண்டும்.

கடந்த ஒரு மாதகாலமாக இந்திய மீனவர்களது இழுவைப் படகுகள் எல்லை தாண்டி வடமராட்சி கிழக்குத் தொடக்கம் மன்னார் வரை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

உள்நாட்டிலும் இழுவைப் படகை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளும் தொடர்சியாக இடம்பெற்று வருகிறது.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்துமாறு கோரி நாளை (இன்று) யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி பேரணியாக யாழ். மாவட்டச் செயலகத்தை சென்றடைந்து மாவட்டச் செயலக செயற்பாடுகளை முடக்கப் போவதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் சம்மேளனம் அறிவித்திருந்தது.

இந்த போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆதரவைத் தெரிவிக்கின்றது." என்றார்.

# நாட்டில் இதுவரை காலம் இல்லாத அளவு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



நாட்டில் இதுவரை காலம் இல்லாத அளவு, இந்தமுறை அதிகளவான நிவாரண தொகை பெற்றுக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்த நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கான படிவத்தில் அரச அதிகாரிகளின் சான்றுப்படுத்தல் மாத்திரமே தேவைப்படுவதாகவும், அதில் அரசியல்வாதிகளின் எவ்வித பரிந்துரைகளும் அவசியப்படாது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குறைகூறும் ஒருசில தரப்பினரால் இவ்வாறான வதந்திகள் சமூகத்திடையே பரப்பப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக கிராம சேவையாளர்களுக்கான சங்கம் ஒன்றை சேர்ந்த ஒரு சில உத்தியோகத்தர்களும் இது போன்ற பொய் வதந்திகளைப் பகிர்கின்றனர் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், மற்றும் நிவாரண சேவை அதிகாரி ஆகியோரின் ஒப்புதலுடன், பிரதேச செயலாளர் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வெள்ள அனர்த்தத்தில் சிக்கிய 11,000 பல்கலை மாணவர்கள்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்குச் சூழ்நிலையின் போது, சுமார் 11,000 மாணவர்கள் பாதுகாக்கப்பட்டனர் எனவும் அவர்களுக்கு ஒரு சிறிய கீறல் கூட ஏற்படவில்லை என்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நவம்பர் 27 ஆம் திகதி இரவு திடீர் அனர்த்தம் காரணமாகப் பேராதனைப் பல்கலைக்கழகம் வெள்ளத்தில் மூழ்கியது.

எனினும், ஒரு மணி நேரத்திற்குள் விடுதிகளில் இருந்த அனைத்து மாணவர்களையும் பாதுகாப்பான விடுதிகளுக்கு மாற்ற முடிந்தது.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்த மாணவர்களும் உடனடியாகப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் கொண்டு வரப்பட்டனர்.

வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த போதும், இந்த 11,000 மாணவர்களும் 5 நாட்களுக்குப் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே மிகவும் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிப்புறப் பகுதிகள் அபாயத்தில் இருந்ததால், மாணவர்களின் பாதுகாப்பைக் கருதி அவர்கள் வளாகத்திற்குள்ளேயே பாதுகாக்கப்பட்டனர்.

இந்த 5 நாட்களும் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக ஸ்ரீ தலதா மாளிகை, இலங்கை இராணுவம், உட்பட பல தொண்டர் நிறுவனங்கள் முன்வந்தன என்று தெரிவித்துள்ளார்.

5 நாள்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்ட 11,000 மாணவர்களும் பின்னர் பஸ்கள் மூலம் அவர்களது வீடுகளுக்குப் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த அனர்த்தத்தில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் எவருக்கும் எந்தவிதமான காயமும் ஏற்படாதது குறித்துத் தான் மகிழ்ச்சி அடைவதாகவும், மாணவர்களைப் பாதுகாப்பாகப் பராமரிக்க உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் மேலும் தெரிவித்தார்.



# கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முகாமைத்துவம் செய்ய உப குழுக்கள்

மழையுடனான வானிலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முகாமைத்துவம் செய்வதற்காக உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன தினம் இடம்பெற்ற போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிடைக்கும் உதவிகள் உரிய முறையில் தரவு கட்டமைப்பில் உள்ளிடுதல், அவற்றை உரிய நபர்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவத்திற்காக பெறப்படும் உதவிகள் பொருத்தமான நபர்களுக்கு சரியாக வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கும் அது குறித்த சரியான தரவுகளை சேகரிப்பதற்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் அனர்த்த முகாமைத்துவ குழுவை நியமித்திருந்தார்.

# இலங்கை கித்துள் உற்பத்தி பாரம்பரியம் யுனெஸ்கோவின் பட்டியலில் இணைந்தது




இலங்கையின் பாரம்பரியமான கித்துள் மதீமஃகித்துள் கபேம எனப்படும், கித்துள் பனையில் இருந்து கித்துள் பாணி, கித்துள் கருப்பட்டி, மற்றும் கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் முறை, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பின் கலாசார பாரம்பரியப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

கித்துள் பனையைத் தட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பமான அறிவு, இந்த நடைமுறையில் ஈடுபடும் கைவினைத் திறமை மற்றும் நுட்பங்கள், இலங்கையின் கலாசாரத்தில் இந்த நடைமுறை வகிக்கும் பங்கு என்பன இந்த அங்கீகாரத்துக்கான முக்கிய காரணங்களாகும்.

இந்த அங்கீகாரம் கித்துள் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன், அதன் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, உள்ளூர் சமூகங்களுக்கு ஆதரவளிக்கவும் உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 4 மாவட்டங்களில் தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டின் 04 மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் பன்வில, உடபலாத, மினிபே, தும்பனே, ஹதரலியத்த, யட்டிநுவர, தெல்தோட்டை, மெததும்பர, குண்டசாலை, பஸ்பாகே, பாததும்பர, பாதஹேவாஹெட்ட ஹாரிஸ்பத்துவ, தொலுவ, பூஜாபிட்டிய, கங்கவட்ட கோரளை, அக்குரணை,கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹுபிட்டி, மாவனெல்லை, எட்டியாந்தோட்டை, ரம்புக்கனை, அரநாயக்க, வரக்காபொல, கலிகமுவ, மாத்தளை மாவட்டத்தின், இரத்தோட்டை, உக்குவெல, மாத்தளை, பல்லேபொல, லக்கல, பல்லேகம, யட்டவத்த, அம்பன்கங்க கோரளை, வில்க முவ, குருணாகல் மாவட்டத்தின் ரிதிகம, மல்லவபிட்டி, மாவத்தகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் மழையுடனான வானிலையால் பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அபாயமிக்க பகுதிகளிலுள்ள சுமார் 600 இற்கும் அதிகமானோர் பாதுகாப்பு இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஊவபரணகம, எல்ல, ஹாலிஎல, சொரணாதோட்ட மற்றும் மீகஹகிவுல பகுதிகளிலுள்ள மக்களே இவ்வாறு வெயேற்றப்பட்டனர் என பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

# லஞ்சம் வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் கலால்வரித் திணைக்கள சார்ஜன்ட் கைது



கலால்வரி திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப்பணியகத்தின் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய ஔடதங்கள் உற்பத்தி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில், சட்டவிரோத இயந்திரங்கள் ஊடாக கஞ்சா அரைத்தமை கண்டறியப்பட்ட நிலையில், அதற்காக சட்டத்தை அமுல்படுத்தாமல் சந்தேகநபர் 20 லட்சம் ரூபாவை லஞ்சமாக கோரியுள்ளார்.O

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வடிவேலுவின் நகைச்சுவை வடிவி லேயே உள்ளது. வரும்போது பார்க்க லாம்.

25 ஆயிரம் ரூபா கொடுப்பனவிற்கு அப்பால் ஏற்கனவே வழங்கிய வெள்ள நிவாரணக் கொடுப்பனவின் பட்டியல் களை கிராம அலுவலர்கள் தத்தமது அலுவலகங்களில் காட்சிப்படுத்தியுள்ள னர். அவை உண்மையில் பட்டியல்கள் அல்ல, சித்திரகுப்தனின் ஆயுள் கணக்கு அறிக்கை போன்றே உள்ளன.

நிவாரணம் பெற்றோர் பட்டியல் என்றால் அதில் அதைப் பெற்ற குடும்பத் தின் தலைவர் பெயர், விலாசம், அடை யாள அட்டை இலக்கம் போன்றவை இருக்க வேண்டுமல்லவா? விலாசம் இருந்தால்தானே அப்படி ஒரு முகவரி உண்டா, அது வெள்ளத்தால் பாதிக்கப் பட்டதா, அந்த முகவரியில் அப்படி ஒரு நபரோ அவரது குடும்பமோ இருந்ததா, அது நிவாரணம் பெற்றதா என்பதை கண்டறிய முடியும். விலாசத்தை வெளிப் படுத்தாவிட்டால் முழுப் பூசணியையும் சோற்றில் மறைத்து விடலாம் அல்லவா?

காட்சிப்படுத்தியுள்ள அறிக்கையில் பெயர், அடையாள அட்டை இலக்கம், வங்கி, வங்கி கணக்கு இலக்கம், எந்த இடத்து வங்கி என்பன தெளிவாக எழுதப் பட்டுள்ளன. மக்கள் கேட்ட முகவரியை மட்டும் காணவில்லை. (கிணறு வெட்டிய ரசீது இருக்கின்றது கிணறு எங்க எனக் கேட்கக் கூடாது போலும்).

'முகவரி ஒருவரின் தனிப்பட்ட விடயம். அதனால் அதை வெளியே விட முடியாது' எனத் தற்போது அதிகாரிகள் புரூடா விடுகின்றனர். அடையாள அட்டை இலக்கம், வங்கி கணக்கு இலக்கம் என் பவற்றை விடவா முகவரி தனிப்பட்ட விடயம் என்பதை மாவட்ட அரச அதிபரும், பிரதேச செயலாளர்களுமே திருவாய் மலர வேண்டும்.

இவற்றிற்கும் அப்பால் பட்டியலில் உள்ள பெயரை வீட்டிற்கு அடுத்த வீட் டில் இருப்பவர்களே கண்டு பிடிக்க முடி யாத அளவிற்குத்தான் அதிகாரிகள் கைவண்ணத்தைக் காட்டியுள்ளனர். பட்டியலில் குடும்பத் தலைவர்களின் பெயர்களுக்குப் பதிலாக குடும்பத்தில் இருக்கும் இளையவர்களின் பெயரில் பதிந்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகின்றது. குடும்பத் தலைவர்க ளின் பெயரில் பட்டியல் இல்லாவிட்டால் ஓட்டைகள் அம்பலமாவது குறையும் என்ற கருத்துப் போலும். குடும்பத் தலை வருக்கு அடையாள அட்டை அல்லது வங்கி கணக்கு இல்லை, அதனால் இளையவர்கள் பெயரில் நிவாரணம் வழங்கினோம் எனக் கூறித் தப்பிக்கின் றனர அதிகாரிகள்.

இவற்றைப் பார்த்தால் நிச்சயமாக முறைகேடுகள்தானோ என்ற முடிவிற்கே மனம் உந்துகின்றது. முடிவை வாசகர் களிடமே விட்டு விடுவோம்....!

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வீதியின் ஓரமாகச் சறுக்கி கவிழ்ந்ததால் ஏற்பட்டவிபத்தில்அதன்இயந்திரஒப்பந்தக் காரர் அதே வாகனத்தால் மிதிபட்டு பரிதாப கரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பதுளை, வெலிமடை – உடுகஹவர பகுதியில் இடம்பெற்றுள் ளது.

உயிரிழந்த நபர் கவிழ்ந்த வாகனத் துக்கு கீழே சிக்கி அரைமணி நேரம் வரை இருந்துள்ளார். பின்னர் மற்றொரு பூம்ட்ரக்வாகனத்தின்உதவியுடன்கவிழ்ந்த வாகனம் தூக்கப்பட்டு, 1990 அவசர மருத் துவ சேவையின் மூலம் அவர் வைத் தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும், அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் அனர்த்த நிவாரணம்: பெயர்ப்பட்டியல் பார்வைக்கு!

### முறைப்பாடுகள் இருப்பின் முறையிடுமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவிப்பு




யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடர் நிவாரண உதவிக்குத் தெரிவானோரின் பெயர் விவரங்கள் அடங்கிய பெயர்ப்பட்டி யல் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், முறைப்பாடுகள் இருப்பின் அது தொடர்பில் முறையிடுமாறு யாழ்ப் பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டித்வா புயலால் 14 ஆயிரத்து 624 வீடுகள் பாதிக் கப்பட்டதாகக் குறிப்பிட்டு, அவற்றைத் தூய்மைப்படுத்துவதற்காக 36 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி பெறப்பட் டுள்ளது. எனினும், யாழ்ப்பாணத்தில் இவ்வளவுதூரம் பெரும் பாதிப்புக்கள் இல்லை என்றும், மோசடியான முறை யில் தரவுகள் வழங்கப்பட்டு இந்த நிதி பெறப்பட்டுள்ளது எனவும் பொது வான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே, யாழ்ப் பாணம் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகங்களில் தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் யாருடைய பெய ரேனும் தேவையிருந்தும் இணைக்கப் படாதிருப்பின் அல்லது தவறான வழி யில் நிவாரணம் கொடுக்க இணைக்கப் பட்டிருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் அறியத் தருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவல கத்தில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## அநுர தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக் கவுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகா ரங்களுக்கான உதவிச் செயலர் அலிசன் ஹூக்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்றது. இதன்போதே அலிசன் ஹூக்கர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை எதிர்கொள்ளும் அனர்த் தங்களுக்கு முகங்கொடுக்க உதவி வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்ட அலிசன் ஹூக்கர், அனர்த் தத்தால் இறந்த அனைவரின் குடும்பங்க ளுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் பல்வேறு நிவாரண மற்றும் நிவாரணக் குழுக்களை நாட்டுக்கு அனுப்புவதில் அமெரிக்க ஜனாதிபதியும் அரசும் அளித்த ஆதரவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங் கைக்கு அளித்த மனப்பூர்வமான ஆத ரவை ஜனாதிபதி பாராட்டினார். 07

# முட்டை விலை அதிகரிக்காது



முட்டை விலையை அதிகரிக்காது, 45 ரூபாய்க்குக் குறைவாக முட்டையை விற்பனை செய்ய முடியும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலப்பகுதி யில் முட்டையின் விலை அதிகரிக்கும் என சிலர் வெளியிடும் தகவல்களில் எந்தவித உண்மைத் தன்மையும் கிடை யாது எனவும் அந்தச் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

வெளிநாடுகளிலிருந்து முட்டையை இறக்குமதி செய்யும் நோக்கில் சிலரால் இவ்வாறு தவறான தகவல்கள் பரப்பப் பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

விலையை அதிகரிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும்

45 ரூபாய்க்கும் குறைவான விலை யில் முட்டையை விற்பனை செய்ய முடி யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# அநுர தலைமையில்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி பொருளாதாரக் குறிகாட்டிகளை உயர்த்தி வரும் நிலையிலே இலங்கை இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார



அபிவிருத்தி மற்றும் நீண்டகால அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்கள் உள்ளிட்ட முக்கிய வருமான வழிகளையும் மீட்டெடுக்க சிறிது காலம் எடுக்கும் என்றும், இது தொடர்பாக அனைத்து நட்பு நாடுகளின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தீர்வை வரிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்துகின்றது என்றும், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் ஆதரவளிப்பதாகவும் அலிசன் ஹூக்க இதன்போது குறிப்பிட்டார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான இலங்கை அரசின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலான அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும், தொடர்ந்தும் இதுபோன்ற வருகைகளை எதிர்பார்ப்பதாகவும் இதன்போது தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தற்போதைய அனர்த்த நிலைமையிலிருந்து மீண்டு இலங்கை மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய அமெரிக்க அரசு வழங்கும் பங்களிப்பையும் பாராட்டினார்.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நம்மவர்கள் ஆக்குவோம்!

கடந்து சென்ற பேரிடரால் முழு நாடும் பாதிக்கப்பட்டது என்றாலும், அதிகம் இழப்புக்களைச் சந்தித்தது கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களை உள்ளடக்கிய மலையகம்தான். அங்குதான் உயிரிழப்புக்களும் அதிகம்.

ஆனால் அந்தப் பகுதிகளுக்கான அரசாங்கத்தின் மீட்பு நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் முழுமையான வீச்சில் எட்டப்படவில்லை என்ற சாரப்பட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதியுமான மனோ கணேசன் எம்.பி. கூறியிருக்கின்றார்.

அரசாங்கத்தின் பேரிடர் நிவாரணம், மீட்புத் திட்டங்கள் மலையகத் தோட்டச் சமூகத்துக்கு எவ்வாறு பொருந்துகின்றது என்பது தமக்குப் புரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

“கண்டியிலோ, நாவலப்பிட்டியிலோ நான் எங்கு நடந்தாலும் மலைப்பாங்கான நிலப்பரப்பில் சாலைகள் எனக்குப் பின்னால் சரிந்து விழுகின்றன. ஆனால் அரசாங்கத்தின் - நாட்டின் - செயற்பாட்டுத் தடம் அந்தப் பகுதிகளை இன்னும் சரியாக அடையவில்லை என்பதையும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் நிலச்சரிவில் புதைந்து கிடக்கின்றமையையும் நான் காண்கின்றேன்.” - என்று அவர் விசனத்துடன் கூறி இருக்கிறார்.

இனிமேலும் மலையகத் தொழிலாளர்கள் மலை அடிவாரங்களில் ஆபத்தை எதிர் நோக்கியபடி குடியிருக்க முடியாது. அவர்களுக்கு சமவெளிகளில் நிலங்கள் வழங்கப்பட்டு, அங்கு அவர்கள் குடியேற்றப்பட வேண்டும் என்று மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கான காணிகளை அரசாங்கம் வழங்க முடியாது என்றால், அந்த மக்களை வடக்குக் கிழக்கில் - பொருத்தமான காணிகளில் - குடியேற்றுங்கள் என்ற கோரிக்கையையும் அவர் முன் வைத்திருக்கிறார்.

நியாயமான கோரிக்கை. அதற்கான உரித்து - உரிமை - மலையகத் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அவர்களை வரவேற்று, அரவணைத்து, இடம் அளித்து, நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு - கடமை - கட்டாயம் - வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு உண்டு.

கடும் உழைப்பாளிகளான மலையக மக்கள் வடக்கு, கிழக்கில் நிலைகொள்வது வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தை தக்க வைக்கவும், ஓர் உழைப்பாளர் சமூகம் தமிழர் தாயகத்தையும் மேம்படுத்தவும் வாய்ப்பளிக்கும் என்பதை தமிழர்கள் மறந்து விடக்கூடாது.

இலங்கை தீவை பொருளாதார ரீதியில் செழுமைப்படுத்தும் விதத்தில் உழைத்த மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை எழரை தசாப்தங்களுக்கு முன்னர் அநியாயமாகப் பறிக்கப்பட்ட போது, அதற்கு எதிராகக் கிளர்ந்து எழுவதில் வடக்கு கிழக்கு, தமிழர்கள் முறையாகப் பணியாற்றவில்லை என்ற வரலாற்றுக் குற்றச்சாட்டு அவர்கள் மீது உண்டு.

அந்தக் குற்றத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, மலையகத் தமிழர்களுக்கு நீதி, நியாயத்தை செய்யவும், தங்களை தமது தாயகத்தில் தமிழர்களாக வலுப்படுத்திக் கொள்ளவும், அருமையான வாய்ப்பாக இதை கருதி, மலையகத் தமிழ் சகோதரர்களை தமிழர் தாயகத்துக்குள் இரு கரங்களால் அரவணைத்து, வரவேற்று, நம்மவர்கள் ஆக்கிக் கொள்வோம்!

# 2,284 புதிய அரச வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி

| தொ.இல | அமைச்சு/மாகாண சபை/ஆணைக்குழு | ஆட்சேர்ப்புக்காக குழு விதந்துரை செய்துள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சு | 196 |
| 2 | சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு | 480 |
| 3 | பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு | 04 |
| 4 | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 19 |
| 5 | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 778 |
| 6 | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் | 222 |
| 7 | வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 107 |
| 8 | பாதுகாப்பு அமைச்சு | 73 |
| 9 | மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வள அமைச்சு | 20 |
| 10 | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு | 21 |
| 11 | கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அமைச்சு | 36 |
| 12 | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 04 |
| 13 | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு | 02 |
| 14 | விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | 74 |
| 15 | மேல் மாகாண சபை | 230 |
| 16 | ஊவா மாகாண சபை | 08 |
| 17 | வடமேல் மாகாண சபை | 02 |
| 18 | நிதி ஆணைக்குழு | 02 |
| | மொத்த எண்ணிக்கை | 2,284 |

அரச சேவையில் தற்போது நிலவும் 2284 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் கால வரையறையை இனங்கண்டு அது சார்ந்த அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய ஆட்சேர்ப்பு தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அமைச்சும் தமது அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் நியமனம் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக மேற்குறித்த குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு 2025-11-14 திகதி நடைபெற்ற மேற்குறித்த அதிகாரிகள் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விதந்துரைகளுக்கமைய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விபத்தில் முன்னாள் சபாநாயகர் காயம்!

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகருமான அசோக ரன்வல நேற்று மாலை சபுகஸ்கந்த பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துணர்.

சபுகஸ்கந்தாவில் உள்ள தெனிய முல்ல பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் ஒரு கார் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது முன்னாள் சபாநாயகரே தனது வாகனத்தை ஓட்டிச் சென்றிருந்தார்.

விபத்தில் காயமடைந்த அவர் சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரில் பயணித்த ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் சபுகஸ்கந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








# மணல் அகழ்ந்த இடங்கள் நுளம்பு பெருகும் அபாயம்

(மரியசீலன்-திலைக்ஸ்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் மணல் அகழப்பட்ட இடங்களில் தற்போது மழைவெள்ளம்தேங்கியுள்ளதால்நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் பலத்த மழை தொடர்ச்சியாக பெய்து வருகிறது

இதன் காரணமாக அண்மைக் காலமாக அனுமதி மற்றும் அனுமதியற்ற முறையில் மணல் அகழப்பட்ட இடங்களில் தற்போது மழை வெள்ளம் தேங்கியுள்ளது

இந்த இடங்களில் அதிகளவான நீர் தேங்கி நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன

இதனால் டெங்கு போன்ற நோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

கட்டைக்காடு, வெற்றிலை கேணி, ஆழியவளை பகுதிகளில் மணல் அகழப்பட்ட இடங்கள் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதால் அதில் அதிகளவான மழை வெள்ளம் தேங்கி காணப்படுகிறது

இந்த நிலையில், வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக வளங்களை அழிப்பவர்களை கைது செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் ட்ரம்ப் உடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடல்



அமெரிக்கா – இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தம் விரைவில் ஏற்படக்கூடும் என்ற ஊகங்கள் வலுத்து வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் நேற்று வியாழக்கிழமை தொலைபேசியில் உரையாடி, பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதித்துள்ளனர்.

இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள 50 வீத வரிவிதிப்பு காரணமாக இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் உருவாகியுள்ளது.

மேலும், எச்1பி விசா, பாசுமதி அரிசி வர்த்தகம் ஆகியவற்றிலும் இந்தியாவுக்கு பாதகமான நடவடிக்கை ட்ரம்ப் எடுத்துள்ளார். இதனையடுத்து வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கும் நோக்கத்தில் இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இந்தச் சூழலில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் பிரதமர் மோடி நேற்று தொலைபேசியில் பேசியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையில், இந்தியா – அமெரிக்க கூட்டாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர் எனவும் வர்த்தகம், முக்கிய தொழில்நுட்பங்கள், எரிசக்தி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து வெளியான அறிக்கையில்,

“அனைத்துத் துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்றுள்ளதில் இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்தனர். சவால்களை எதிர்கொள்ளவும், பொதுவான நலன்களை முன்னெடுத்துச் செல்லவும் நெருக்கமாக இணைந்து செயல்பட பிரதமர் மோடியும் ட்ரம்பும் ஒப்புக்கொண்டனர்.

21 ஆம் நூற்றாண்டுக்கான இந்தியா – அமெரிக்க COMPACT (இராணுவ கூட்டாண்மை, விரைவுபடுத்தப்பட்ட வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான வாய்ப்புகளை ஊக்குவித்தல்) ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு மையமாக உள்ள முக்கிய தொழில்நுட்பங்கள், எரிசக்தி மற்றும் பாதுகாப்பு மற்றும் பிற முன்னுரிமைத் துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“ஜனாதிபதி ட்ரம்புடன் மிகவும் அன்பான மற்றும் ஈடுபாடு மிக்க உரையாடலை மேற்கொண்டேன். எங்கள் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நாங்கள் ஆய்வு செய்தோம்.

மேலும் பிராந்திய மற்றும் சர்வதேச நிகழ்வுகள் குறித்து விவாதித்தோம். உலக அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்காக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து இணைந்து செயல்படும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# விளைநிலங்களை காக்க போராடிய பாண்டியனை சிறையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை வேண்டும்

## அரசுக்கு சீமான் வலியுறுத்தல்



விளைநிலங்களை காக்க போராடிய பி.ஆர்.பாண்டியனை வழக்கில் இருந்து விடுவிக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மற்றும் நீதிமன்றம் மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“திருவாரூர் மாவட்டம் விக்கிரபாண்டியம் கிராமத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு எண்ணெய் மற்றும் இயற்கை எரிகாற்று கழக நிறுவனத்துக்கு ஓ.என்.ஜி.சி) எதிராக போராடியதுக்காக, அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பி.ஆர். பாண்டியனுக்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருப்பது கண்டனத்துக்குரியது.

விளைநிலங்களை காக்க விவசாயிகளை ஓரணியில் திரட்டி போராடிய பி.ஆர். பாண்டியன் மீது உள்நோக்கத்துடன் பொய் வழக்கு தொடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆளும் அரசுகள் இழைக்கும் அநீதிக்கும், அடக்குமுறைக்கும் எதிராகப் போராடுவது அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமை. அந்த வகையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் உள்ள காவிரிப்படுகையை பாதுகாக்க பி.ஆர்.பாண்டியன் முன்னெடுத்த போராட்டம் எப்படி தவறாகும்?

அப்படி போராடியவர் மீது வழக்கு தொடுத்து சிறைப்படுத்துவதும் அரசியலமைப்புக்கு எதிரானது. விளைநிலங்களை காக்கப் போராடிய 7 விவசாயிகளை குண்டர் சட்டத்தில் சிறையிலடைத்த தி.மு.க. அரசிடம் எப்படி கருணையை எதிர்பாக்க முடியும்?.

ஓ.என்.ஜி.சி. குழாய்களைச் சேதப்படுத்தியதாக சொல்லப்படும் குற்றத்துக்கு 13 ஆண்டுகள் சிறை என்றால், முன்னோர்கள் அரும்பாடுபட்டு காத்த விளை நிலங்களை மீளவும் உருவாக்க முடியாத அளவுக்கு மீத்தேன், ஈத்தேன், ஹைட்ரோ கார்பன் என அழித்தொழிப்பவர்களுக்கு யார் தண்டனை கொடுப்பது?

எனவே, விளைநிலங்களை காக்க போராடிய பி.ஆர்.பாண்டியனை வழக்கில் இருந்து விடுவிக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மற்றும் நீதிமன்றம் மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.” என்று சீமான் கூறியுள்ளார்.



# மியான்மர் இராணுவ தாக்குதலில் மருத்துவமனை ஒன்று தரைமட்டம்

## 34 பேர் உயிரிழப்பு

மியான்மரில் இராணுவத்துக்கும், கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், மருத்துவமனை மீது இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 80 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ரகைன் மாகாணத்தின் மிராக்-யூ நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனையை குறிவைத்து, ஆளும் மியான்மர் இராணுவத்தின் போர் விமானம் புதன்கிழமை இரவு வான்வழி தாக்குதல் நடத்தியதாக மியான்மர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அராக்கன் படை எனப்படும் கிளர்ச்சி குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியில் இந்த மருத்துவமனை செயல்பட்டு வந்தது. இராணுவ விமானம் வீசிய இரண்டு குண்டுகள் மருத்துவமனையை தாக்கின.

இந்தத் தாக்குதலில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள், மருத்துவப் பணியாளர்கள் உள்ளிட்ட 34 பேர் சம்பவ விடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களில் 17 ஆண்களும், 17 பெண்களும் அடங்குவர். மேலும், 80 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மருத்துவமனையின் கட்டடங்கள், வாகனங்கள் கடும் சேதமடைந்தன.

கடந்த 2021 ஆம் ஆண்டு இராணுவ ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதில் இருந்து, மியான்மர் முழுவதும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்தச் சூழலில், ஒரு மருத்துவமனையை குறிவைத்துத் தாக்கிய இராணுவத்தின் செயல் மனித உரிமை மீறல் என ஐ.நா. மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்தத் தாக்குதல் குறித்து மியான்மர் இராணுவம் இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.











# ரஷ்யாவின் சந்தை கட்டடத்தில் ஏற்பட்ட தீப்பரவலில் ஒருவர் பலி

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரில் உள்ள மிகப்பெரிய சந்தையொன்றில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது பலத்த வெடிப்பு சத்தங்களுடன், அந்த கட்டடத் தொகுதி முழுவதும் தீ பரவியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதி புகையில் சூழ்ந்தையடுத்து, அப்பகுதியில் உள்ள மக்கள் அங்கிருந்து தப்பியோடினர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்பு படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்துள்ளனர்.

இந்த தீப்பரவலில் சந்தை கட்டடத்தின் பெரும் பகுதி தீக்கிரையானதுடன் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தல் பெப்ரவரி 12 ஆம் திகதி இடம்பெறும்

பங்களாதேஷின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகியதன் பின்னர், புதிய பிரதமர் தெரிவுக்காக தேர்தல் பெப்ரவரி மாதம் இடம்பெறும் என அந்த நாட்டு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மற்றும் கடந்த வருடம் நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட பின்னர் அனைத்து கட்சிகளும் ஒருமித்து இணக்கம் கண்ட ஜுலை சாசனத்துக்கான வாக்குப்பதிவும் குறித்த திகதியில் இடம்பெறவுள்ளது.

இதனை அந்த நாட்டு தலைமைத் தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த தேர்தலில், 300 தொகுதிகளில் சுமார் 127.6 மில்லியன் பேர் வாக்களிக்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, வாக்காளர்கள் இரண்டு வாக்குகளையும் ஒரே நேரத்தில் செலுத்தவுள்ளதால், வாக்கு பதிவு நேரம் ஒரு மணித்தியாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



# மன்னார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது

மன்னார், முள்ளிக்குளம் பிரதேசத்தில் தலா 50 மெகாவோட் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையங்கள் இரண்டை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டுக்கான மின்சார வழங்கலின் 70 வீதம் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யும் குறிக்கோளை அடைவதற்கான அரசின் விரிவான திட்டத்துக்கமைய 20 ஆண்டு தொழிற்பாட்டு காலப்பகுதியில் நிர்மாணித்தல், உரித்தை கொண்டிருத்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் 100 மெகாவாற்று காற்றாலை மின்னுற்பத்திப் பூங்கா (தலா 50 மெகாவாற்று கொண்ட 02 மின்னுற்பத்தி நிலையங்கள்) திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தனியார்த் துறையின் ஆர்வமுள்ள அபிவிருத்தியாளர்களிடமிருந்து முன்மொழிவுகளைக் கோருவதற்காக 2025-02-10 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, சர்வதேச போட்டி விலைமனு கோரல் முறைமையைப் பின்பற்றி மேற்குறித்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முன்மொழிவு கோரப்பட்டு, 7 பேர் தமது திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்குறித்த முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில் Consortium of Vidullanka PLC & David Pieris Motor Company (Lanka) Limited மற்றும் Wind Force PLC ஆகியவற்றுக்கு மேற்குறித்த இரண்டு 50 மெகாவோட் காற்றாலை மின்னுற்பத்தி வசதிகளை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

# ‘டித்வா’ சூறாவளி தாக்கம் காரணமாக ‘இலங்கையர் தினம்’ நிகழ்வு ஒத்திவைப்பு



நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட டித்வா சூறாவளி அனர்த்தம் மற்றும் தொடர்ச்சியான மீட்புப் பணிகளைக் கருத்தில் கொண்டு, டிசம்பர் 12 முதல் 14ஆம் திகதி வரை நடைபெறவிருந்த முதலாவது “இலங்கையர் தினம்” தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வானது கொழும்பு மாநகர சபை மைதானம், விகாரமஹாதேவி பூங்கா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதான வீதிகளில், பொது மற்றும் தனியார் துறையினரின் பங்கேற்புடன் நான்கு வலயங்களைக் கொண்ட ஒரு பெரிய அளவிலான தேசிய கொண்டாட்டமாக நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

சமூகங்களிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், இணக்கமான இலங்கையை உருவாக்குவதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதியால் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு உரையில் இந்த நிகழ்வு முன்மொழியப்பட்டது.

அத்தோடு, இலங்கையின் பல இன, மத மற்றும் பல்வகைப்பட்ட கலாசார அடையாளங்களை முன்னிலைப்படுத்தும் நோக்கில், இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் பொறுப்பு புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில், மாவட்ட மட்டத்திலான உணவு கலாசாரங்கள், பாரம்பரிய கலைகள், உள்ளூர் கைத்தொழில்களின் கண்காட்சிகள், விற்பனை நிலையங்கள், மற்றும் புதிய தயாரிப்பு வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல் ஆகியன திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வை நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் ஒக்டோபரில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள, முக்கியமான உள்கட்டமைப்பு சேதமடைந்துள்ள, மற்றும் “டிட்வா” சூறாவளியால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் அவசரகால சேவைகள் தொடர்ந்தும் இயங்கிவரும் இத்தருணத்தில், நாடு தழுவிய கலாசார விழாவை நடத்துவது பொருத்தமற்றது என அரசாங்கம் தீர்மானித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலை சீரடைந்தவுடன் “இலங்கையர் தினம்” நிகழ்ச்சித் திட்டத்திற்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.








# கோர விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

**(க.மகாதேவன்)**

கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம்,பாதெனிய வீதியில் பயணம் செய்த கனரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தனியாருக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் பின்பகுதியில் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் கனரக வாகனத்தில் பயணம் செய்த சாரதியின் உதவியாளர் உயிரிழந்தார் என்று தெரிவித்த அநுராதபுரம் பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஒன்றாக
முன்னோக்கி

# இயற்கை அனர்த்தத்தின் காரணமாக வடக்கில் நன்னீர் மீன்பிடியில் ரூ.1,500 மில்லியன் இழப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியாளர்களிற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நெக்டா நிறுவனம் அறிக்கையிட்டுள்ளது.

இந்தொ புயலின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பில் அகப்பட்டு வடக்கின் 5 மாவட்டங்களிலும் நன்னீர் பிடியாளர்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 387 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. வலைகள், 44 படகுகள் மற்றும் 110 சாதனங்களும் அழிவடைந்துள்ளன்ச். இதேபோன்று 27 கடல் அட்டைப் பண்ணைகளும், 04 இறால்ப் பண்ணைகள் மற்றும் 7 நண்டுப் பண்ணைகளும் அழிவடைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 200 மில்லியன் ரூபா சொத்து அழிவடைந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 6 குளங்களில் தொழிலில் ஈடுபடும் 338 மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர். 173 கடல் அட்டைப் பண்ணைகள், 24 பாசி வளர்ப்பு இடங்கள் ஆகியவற்றுடன் 37 படகுகள், வலைகள் என்பனவற்றை இழந்து 231 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. இதற்கமைய கிளிநொச்சியில் 180 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 கடல் அட்டைப் பண்ணைகள் அழிவடைந்தமையோடு 39 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 10 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலே 13 குளங்களில் பயன்படுத்தப்படும் 97 படகுகள் அழிவடைந்தமையோடு, அதிக வலைகளும் அள்ளிச் செல்லப்பட்டு விட்டன. இவற்றின் மூலம் 601 குடும்பங்கள் பாதிக்கப்பட்டதனால் முல்லைத்தீவில் 290 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலே 9 குளங்களில் பயன்படுத்தப்படும் 24 படகுகள், 371 வலைகள் அழிவடைந்தமையால் 147 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேபோன்று கடல் அட டைப் பண்ணைகள் அழிவடைந்தமையால் யாழில் 35 மில்லியன் ரூபாவும், மன்னாரில் 270 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சியில் 188 மில்லியன் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

4 இறால் பண்ணைகள் அழிவடைந்தோடு, வளர்க்கப்பட்ட பாசியில் 50 தொன் இல்லை எனவும் பாசி ஒரு கிலோ 70 ரூபா வீதம் 60 மில்லியன் ரூபா இழப்பு எனக் கூறப்படுகின்றது.

இந்த வகையில் வடக்கில் மொத்தம் 1,500 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக நெக்டா அறிக்கையிட்டுள்ளது.

# ஆவரங்காலில் 500 குடும்பங்களுக்கு இடர்கால நிவாரணம் வழங்கப்பட்டது







ஆவரங்கால் சர்வோதய வெளிநாட்டு ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்பில் ஆவரங்கால் மேற்கில் உள்ள 500 குடும்பங்களுக்கு இடர்கால உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அண்மையில் இலங்கையைத் தாக்கிய புயல், மழை காரணமாக வடக்கிலும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, ஆவரங்கால் மேற்கில் உள்ள 500 குடும்பங்களுக்கு இடர்கால உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இப்பொதிகள் கடந்த மூன்று தினங்களாக (செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமை) வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# கரவெட்டியில் இலவச கால்நடை மருத்துவ சேவை

(பா.சதீசன்)

அண்மைய புயலினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உதவும் விதமாக கரவெட்டி அரச கால்நடை வைத்திய அலுவலகத்தினால் இலவச நடமாடும் கால்நடை வைத்திய சேவை ஒன்று வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். சுகிர்தன் தலைமையில் நேற்று காலை 9.30 மணியளவில் தல்லை அம்பாள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் பண்ணையாளர்களுக்கு இடர்கால பண்ணை முகாமைத்துவம், நோய்த்தடுப்பு ஆலோசனைகள், இலவச மருந்துப்பொருள்கள், இலவச நடமாடும் மருத்துவ சேவை என்பன வழங்கப்பட்டன. இதில் 50 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பயன்பெற்று இருந்தார்கள். அத்தோடு சீரற்ற வானிலையையும் பாராது வைத்தியர்கள் ஆற்றிய இச்சேவையை பலரும் பாராட்டினர்.













# மலையக மக்களுக்கு வடக்கு, கிழக்கில் வாழ்விடம் கொடுப்பது தமிழரது கடமை

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வேந்தன் தெரிவிப்பு



(பூ.லின்ரன்)

அனர்த்தம் காரணமாக இலங்கையின் பல பகுதிகள் பாதிக்கப்பட்ட நிலையில் அதிகமாக இலங்கையின் மலையக பகுதியே இழப்புகளைச் சந்தித்தது. பல உயிர் மற்றும் சொத்து சேதங்களும் ஏற்பட்டன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு வடக்கு கிழக்கில் வாழ்விடம் கொடுப்பது எமது ஜனநாயக கடமை என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக மலையக மக்கள் பாரியளவு இழப்புக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக தற்போதும் பெரும் எண்ணிக்கையான மலையக மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து வருகின்றனர். முகாம்களில் வாழும் மக்களுக்கு அரசாங்கம் நிரந்தர வசிவிடத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் கையில் உள்ளது.

அவர்களுக்கான பாதுகாப்பான நிரந்தர காணியினை வழங்கி அதில் அவர்களுக்கான வீடுகளை அமைத்து, அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்

மலையக மக்கள் இப்படிக் குடியேறுவதற்கான காணிகளை ஜனாதிபதியிடம் கூறிப் பெற்று தருவார் எனவும் இல்லை, என்றால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மலையக மக்கள் சென்று குடியேறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி தருவார் எனவும் மலையக மக்களிடம் மனோ கணேசன் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

எம்மைப் பொறுத்த வகையில் மலையக மக்கள் நிர்க்கதியாக இருக்கும் போது நாம் (தமிழ் மக்கள்) கடந்த நாள்களில் கை கொடுத்து உள்ளோம். அதே போன்றும் இன்றும் நாம் அவர்களுக்கான ஒரு பாதுகாப்பான வாழ்விடத்தை அமைத்து கொடுப்பதற்கும் வடக்கு கிழக்கு பகுதிகளில் வந்து குடியேறி அவர்கள் ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை வாழ்வதற்குக் கை கொடுக்கவும் நாம் தயாராக இருக்கிறோம்.

குறிப்பாக வடக்கு பகுதிகளில் இருக்கும் அரச காணிகளில் அவர்களை அமர்த்துவதற்கான செயற்பாடுகளை ஆளும் அரசாங்கத்துடன் கதைத்து வெகு விரைவில் செயல்படுத்த வேண்டும்.

அதே போன்று புலம்பெயர் சேதத்தில் இருக்கும் உறவுகள் பலர் தமது காணிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கத் தயாராக உள்ளனர். அவர்களுக்கான நிரந்தர வசிவிடத்தை ஏற்படுத்தி கொடுப்பதற்காக நாம் எல்லோரும் இன, மத பேதமின்றி அனைவரும் ஒரே மக்களாக ஒன்றிணைய வேண்டும்.

அது மட்டுமின்றி இந்திய அரசாங்கமும் இவ் விடயத்தைக் கருத்தில் கொண்டு பூரண ஒத்துழைப்பைத் தர வேண்டும். - என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு நகரில் திடீரென நீல நிறமாக மாறிய கிணற்று நீர்





( கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பொற் தொழிலாளர் வீதியில் உள்ள வீடு ஒன்றின் கிணற்று நீர் திடீரென நீல நிறமாக மாறியுள்ள அதிசய சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டில் அமைந்துள்ள கிணற்று நீரைப் பெறுவதற்காக வழமைபோல நேற்று காலையில் தண்ணீர் தொட்டியை நிரப்புவதற்கு தண்ணீர் பம்பை இயக்கியவுடன் தண்ணீர் நீல நிறத்தில் வெளிவந்துள்ளது.

அதிர்ச்சியடைந்த வீட்டுக்காரர் உடனடியாக தண்ணீர் பம்பை நிறுத்திவிட்டு கிணற்றில் வாளியில் தண்ணீரை எடுத்து சோதனை செய்தபோது அது நீல நிறத்தில் கலர் மாறியுள்ளதை உறுதிபடுத்தினார். கிணற்றை எட்டி பார்த்த போது அங்கும் அவ்வாறான நீல நிறத்தில் தண்ணீர் இருப்பதை கண்டு அவர் அதிசயமடைந்தார்.

இது தொடர்பாக கிராம உத்தியோகத்தருக்கு அறிவித்துள்ளார் என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.



# ஆழ்கடலில் நோய்வாய்ப்பட்ட மீனவரை சிகிச்சைக்கு கரைக்கு விரைந்து கொண்டு வர உதவிய கடற்படை

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

திருகோணமலையிலிருந்து 16 கடல் மைல் (சுமார் 29 கி.மீ) தொலைவில் கிழக்குக் கடலில் உள்ளூர் பல நாள் மீன்பிடிக் கப்பலில் கடுமையாக நோய் வாய்ப்பட்ட நிலையிலிருந்த ஒரு மீனவரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு, அவசரமாக தரையிறக்கி, சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கடற்டையினர் அனுப்பி வைத்தனர்.

திருகோணமலை, கோட்பே மீன்வளத் துறைமுகத்திலிருந்து டிசம்பர் 02 ஆம் திகதி ஆறு மீனவர்களுடன் புறப்பட்ட பல நாள் மீன்பிடிக் கப்பலான ‘அகீத் 2’ (IMUL-A-0957 TLE), திருகோணமலைக்கு கிழக்கே 16 கடல் மைல் (சுமார் 29 கி.மீ) தொலைவில் கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது, அதில் இருந்த ஒரு மீனவர் நோய்வாய்ப்பட்டு ஆபத்தான நிலையில் விழுந்தார். மீனவரை சிகிச்சைக்காக விரைந்து கரைக்குக் கொண்டுவர உதவி வழங்குமாறு கடற்படையை மீன்வள மற்றும் நீர்வளத் துறை அவசரமாகக் கோரியது. உடனடியாகப் பதிலளித்த கடற்படை, ஆபத்தான நிலையில் இருந்த மீனவரை சிகிச்சைக்காக கரைக்குக் கொண்டுவர கிழக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடற்படைக் கப்பலை கடல் பகுதிக்கு அனுப்பியது.

அதன்படி ஆபத்தான நிலையில் இருந்த மீனவரை மீட்ட கடற்படையினர், அவருக்கு அடிப்படை முதலுதவி அளித்து, கடற்படைக் கப்பலில் திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டு வந்து, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கடற்படைத் தலைமையகத்தில் நிறுவப்பட்ட கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்புடன், இலங்கைக்கு சொந்தமான கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வலயத்திற்குள் ஆபத்தில் உள்ள கடல்சார் மற்றும் மீனவ சமூகத்திற்கு நிவாரணம் வழங்குவதற்கும் கடற்படை ஆயத்தமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.









# கிழக்கு முஸ்லிம் தலைவர்கள் ஓரணியில் கம்பளை நகர சபை துப்புரவுப் பணியில்



அப்பாவி பொதுமக்கள் பதற்றம் அடைய நேரிடுவதால் நன்றாக ஆராய்ந்த பின்னரே சிவப்பு எச்சரிக்கைகள் விடுக்க வேண்டும். அத்துடன் வெள்ள அபாயத்தை தவிர்ப்பதற்கு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உரிய பொறிமுறைகள் கையாளப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கம்பளை, கெலிஓய பிரதேசங்களில் குப்பை கூளங்களை அகற்றி சுத்திகரிக்கும் பணியில் இரண்டாவது நாளாகவும் தொடர்வதற்கு முன்னதாக நேற்று முன்தினம் புதன் கிழமை முற்பகல் கம்பளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு ஹக்கீம் எம்.பி மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வெள்ளத்தினால் பாதிப்படைந்திருக்கின்ற கம்பளை தொகுதியில் கம்பளை நகரசபை பிரதேசத்தில் இருக்கின்ற துப்பரவு பணிகளில் – குறிப்பாக குப்பைகளை அள்ளுகின்ற பாரியதொரு தேவை இருப்பதை – எனக்கு கம்பளை நகர சபையின் தலைவர் இறுக்க வீரரட்ண சுட்டிக்காட்டி வேண்டுகோள் விடுத்தார். கம்பளை நகர சபை உறுப்பினர்கள் அனைவரும் இதனைத் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக நான் அக்கரைபற்று மாநகர சபையின் தற்போதைய முதல்வர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஏறாவூர் நகரசபையின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் ஆகியோரிடம் நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி சபைகளின் கனரக இயந்திரங்களையும் தீயணைப்பு வாகனத்தையும், ஏனைய சுத்திகரிக்கும் இயந்திரங்களையும் எடுத்து கொண்டு அனுபவம் வாய்ந்த ஊழியர்களையும் அழைத்துக் கொண்டு கம்பளை, கெலிஓய பிரதேசங்களில் குப்பைகளை அகற்றி சுத்திகரிக்கும் பணிகளில், தொடர்தேர்ச்சியாக ஈடுபடுத்துவதற்குத் தயாராக வந்திருக்கின்றார்கள்.

இயன்றவரை எங்களால் முடிந்த இந்த பாரிய சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டு இந்த அனர்த்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற கம்பளை பிரதேச அனைத்து இன மக்களின் நலனுக்காகவும் இந்த நடவடிக்கைகளை எடுக்கின்றோம்.

எங்களுக்கு இது விடயத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பாளர்கள், மாநகரசபை ஆணையாளர், ஏனைய உள்ளூராட்சி சபை அதிகாரிகள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார்கள். ஆளுநர் உட்பட அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்து கொள்கின்றேன்.

நிலவுகின்ற காலநிலையை பொறுத்தவரை அதிக மழை வீழ்ச்சியினால் மகாவலி ஆறு பெறுக்கெடுத்து ஓடிய தன் விளைவாக கம்பளை, கெலிஓய போன்ற பிரதேசங்களில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான சிவப்பு எச்சரிக்கைகளை பொருள்படுத்தாமல் இருக்க முடியாது. ஆனாலும், சிவப்பு எச்சரிக்கையின் உண்மைத் தன்மை சரியான முறையில் கண்டறியப்படாத பட்சத்தில் அப்பாவி மக்கள் அச்சத்தின் காரணமாக பதற்றம் அடையும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. சிலர் மனஉளைச்சலுக்கு அப்பால் உயிராபத்து மிக்க இருதய நோய்க்கு ஆளாகிய நிலையும் இருந்திருக்கிறது. இறப்பு சம்பவித்ததாகவும் கூறப்படுகின்றது.

சீரற்ற காலநிலை பற்றி அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிந்த போதிலும், மகவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொறியியல் பொறிமுறை உரிய முறையில் செயல்படுத்தபட வில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்திருக்கின்றது. எதிர் காலத்தில் இவ்வறான அனர்த்தங்கள் நிகழாமல் தவிர்ப்பதற்கு விரிவான முறையில் ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டும்.

கம்பளை, கெலிஓய பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான காரணம் மண் சரிவுகளுக்கு அப்பால், கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பொறியியலாளர் தனது பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றினாரா என்பதை கண்டறியப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. ஜனாதிபதியும் கூட இது தொடர்பில் கவனஞ் செலுத்தி இருக்கின்றார். பின்னர், உண்மைகள் வெளிவரும்.

இவ்வாறான அனர்த்தம் நிகழ்வுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு அதற்கு பொறுப்பானவர்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். – என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முஸ்லிம்காங்கிரஸ்தலைவர்ரவூப்ஹக்கீம் எம்.பியுடன், அக்கரைபற்று மாநகர சபை மேயர் ஏ.எல். அதாவுல்லாஹ், மட்டக்களப்பு எம்.பியான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மாநரகசபை உறுப்பினர் தவம், முன்னாள் மாநகரசபை தலைவர் ஸகி அதாவுல்லாஹ், கண்டி மாவட்ட எம்.பி. சுஜீவ சேரசிங்க, முன்னாள் கண்டி மாவட்ட எம்.பி. அப்துல் ஹலீம், கம்பளை நகர சபை தலைவர் இறுக்க வீரசிங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# முல்லை. மாவட்ட அனர்த்த நிலைமைகள் குறித்து மாவட்ட செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல்

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் நேற்று முல்லைத் தீவு மாவட்டசெயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரங்க குணசேகர இக்கலந்துரையாடலில் பங்கேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத் தீவு மாவட்டத்தில் அனர்த்தத்தினால் வீதிகள், பாலங்கள் பாதிக்கப்பட்டிருப்பது தொடர்பாலும், மக்களின் வீடுகள், உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புக்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நகர அபிவிருத்தி அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார். சீரமைப்புப்பணிகள் மேற்கொள்வது குறித்தும் வலியுறுத்தியிருந்தார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், அனர்த்தமுகாமைத்துவத் திணைக்களம், பிரதேசசெயலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினரும் மாவட்டத்தின் அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பில் பிரதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் கலந்துகொண்டிருந்தார்.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து முல்லைத்தீவு பஸ் நிலையம் மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாயாற்றுப் பாலம் போன்றவை அமைச்சர் குழுவினால் பார்வையிடப்பட்டன.









# அரசியல் பேதங்களைக் கடந்து பாதிப்புற்றோருக்கு உதவுவோம்

## யாழில் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பி. அழைப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

அரசியல் பேதங்களை கடந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி நினைக்கின்றார். அதனை எல்லோரும் உணர்ந்து ஒரே கோட்டில் பயணம் செய்வதன் மூலமே நாட்டையும் மக்களையும் மீட்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவித்த போதே றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற வெள்ள அனர்த்தம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து பல்வேறு முறைப்பாடுகள் எமக்கு கிடைத்து வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளப் பெருக்குக் காரணமாக பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். சொத்துக்களும் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் பிரதேச செயலக மட்டத்தில் தங்களுடைய சேதம் தொடர்பான பதிவுகள் முறையாக பதியப்படவில்லை, கண்காணிக்கப்படவில்லை என்கிற முறைப்பாடுகள் வருகின்றன. அது சம்பந்தமாக மாவட்ட செயலாளரின் கவனத்திற்குஜ் கொண்டு சென்றுள்ளோம்.

கிராம மட்டத்திலே கிராம உத்தியோகத்தர்கள்,ப்பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இந்த சேதங்களைக் கள ஆய்வு செய்து சரியான தகவல்களை அவர்கள் வழங்க வேண்டும்.

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடு வரக்கூடாது என ஜனாதிபதி எமக்கு தெரிவித்துள்ளார்.

யாராவது மக்கள் முறைப்பாடு செய்தால் அதிகாரிகள் அவர்களுடன் முரண்படாது அது தொடர்பில் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்யும் போது அவர்களுடன் அரசு அதிகாரிகள் முரண்படுகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. அது தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

அரசாங்கம் சரியான நிவாரணத்தை அறிவித்திருக்கிறது. சில மக்கள் உண்மையில் பாதிக்கப்படவில்லை. சிலர் பொய் சொல்லி செயற்பட்டுள்ளனர். அவர்கள் மனிதாபிமானமாக செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் செல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

அதேபோன்று வெள்ள அனர்த்தத்தில் நேரடியாக பாதிக்கப்படாமல் வேறு வகையில் பாதிக்கப்பட்ட சமூகம் எம் மத்தியில் உள்ளது. கடற்றொழிலாளர்களுக்கு வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாக பல நாள்களாக அவர்கள் தொழிலில் ஈடுபடவில்லை. நாளாந்தம் உழைப்பவர்கள் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தினக் கூலிகளுக்கு செல்வோரும் இந்த மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.


இது சம்பந்தமாக மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்று அவர்களுக்கான ஒரு தீர்வை கட்டாயம் நாம் பெற்றுக் கொடுப்போம்.

நாட்டிலே ஊழல் இல்லாத அரசாங்கம், ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைந்துள்ளனர்.

எழுபது நாடுகளுக்கு மேல் நேரடியாக தொடர்புகொண்டு உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றன. புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துக்கு நேரடியாக உதவி செய்கின்றார்கள். இந்த இடத்தில் சுனாமி வந்த பொழுது ஏற்பட்ட அழிவுகளை விட மூன்று மடங்கு அழிவுகள் தற்போது ஏற்பட்டன எனக் கணிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் மத்தியில் உள்ள சில பேர் சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி விடமாட்டான் என்பது போன்றே நிலைமை காணப்படுகிறது.

அரசியல் பேதங்களை கடந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சலுகை வேண்டும் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி நினைக்கின்றார். அதனை எல்லோரும் உணர்ந்து ஒரே கோட்டில் பயணம் செய்வதன் மூலமே நாட்டையும் மக்களையும் மீட்க முடியும். அரசியலுக்கு அப்பால் இந்த இடத்தில் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றாக செயல்பட்டு நாட்டை மீட்க வேண்டும் - என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்முரமாக இருப்பீர்கள். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர் பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற் கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப் படுவதை தவிர்க்க வேண்டும். எதிர் மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப் படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக் காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன் களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளை யும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய் தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த் தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத் திக் கொள்ளலாம். உங்களின் இனி மையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்க ளுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

# புத்தளம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் நான்கு வாக்குகள் வித்தியாசத்தில் நேற்றுத் தோல்வி





**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் நான்கு வாக்குகள் வித்தி யாசத்தில் நேற்றுத் தோல்வி கண்டது.

புத்தளம் நகர சபை, இப்போது மாந கர சபையாக மாற்றப்பட்ட பின்னர் நடை பெற்ற உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, தேசிய மக்கள் சக்தி கட்சி சபையில் அதிகாரத்தை நிலைநாட்டி ஆட்சி அமைத்தது.

அதன்படி, மேயர் (தேசிய மக்கள் சக்தி யின்) எம். என். ரின்சாத் அகமது 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நேற்று வியாழக் கிழமை தாக்கல் செய்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வாக்கெடுப்பில், வரவு –செலவுத் திட்டத் திற்கு ஆதரவாக 07 வாக்குகளும் எதி ராக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஓர் உறுப்பினர் நடுநிலை வகித்துள்ளார்

வரவு – செலவுத் திட்டம் தோல்வி யடைந்ததைத் தொடர்ந்து, மேயர் சபையை 12 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.